# ‘உளி எழுத்துக்கள்’ நூல் வெளியீட்டு விழா
# ஆசிரியர் நூல் அறிமுக உரை 13.03.2014

உளி எழுத்துக்கள் நூல் வெளியீட்டு விழாவின் தலைமை விருந்தினர் நமது வணக்கத்திற்குரிய, மரியாதைக்குரிய மேதகு தமிழக ஆளுநர் அவர்களுக்கு எனது சிரம்தாழ்ந்த முதல் வணக்கம்.மிகப்பழமை வாய்ந்த விஸ்வகர்ம ஆதீனத்தின் ஜகத்குரு ஸ்ரீ சிவசண்முக ஞானாச்சார்ய சுவாமிகள், வணக்கத்திற்குரிய, தமிழ்ப் பல்கலைக்கழக துணைவேந்தர் திரு M.திருமலை அவர்கள், சிற்றுளியில் காவியம் படைத்த விவேகானந்தர் பாறையை உருவாக்கிய எனது தந்தை திரு SK. ஆச்சாரி அவர்கள், விழாவை சிறப்பு செய்ய வந்திருக்கும் எனது குரு Dr. கணபதி ஸ்தபதியின் துணைவியார் அன்புக்குரிய அத்தையார் தக்ஷிணாவதி அம்மையார், மரியாதைக்குரிய இளைய மடாதிபதி சிவராஜ சுவாமிகள், எனது அன்புக்குரிய அரசு அதிகாரிகள்,சான்றோர்கள், தாய்மார்கள் ,உறவினர்கள், நண்பர்கள், னைவருக்கும் எனது தாழ்மையான வணக்கங்கள்.

மண்மூடி மறைந்து கிடந்த பண்டைய படைப்புகள் மண்விலகியது 60 ஆண்டுகளாகத்தான். ஆனால், மணல் மூடிக்கிடந்த படைப்பாளன் முகம் இன்னும் மண்மூடியே கிடக்கிறது. மணல் மூடிய படைப்பாளன் முகம் காட்ட, முகவரி காட்ட முயற்சித்ததின் முதல் பணிதான் இந்த உளி எழுத்துக்கள். உளி எழுத்துக்கள் என்ற சுனாமி வந்துதான் கலைகளுக்கான தொப்புள்கொடி உறவை காட்டவேண்டியது காலத்தின் கட்டாயம். ஆம் இந்த தர்பார்ஹாலில் வேந்தர் வெளியிட தமிழ்த்தாய் வீற்றிருக்க கல்லில் காவியம் படைக்கும் இந்தக் கல் தச்சன் கைகட்டி முகம் காட்டி அரங்கேற்றம் செய்ய வந்திருக்கிறேன். இன்றைய நிகழ்வு என்னை பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னர் நிகழ்ந்த அவைக்களத்திற்கு அழைத்துச் செல்கிறது.

ஆலமரத்தின் கீழே அருள்பாலிக்கும் அந்த படைப்புக்கடவுள் அந்த கண்மூடிய அமைதிக்கடவுள் கண் விழிக்க வேண்டுமென்ற எனது 30 ஆண்டு தவம் இந்நூலில் வெளிப்பட்டிருக்கிறது. நமது உடல்களில் மரபணுக்களாய் வாழும் சரித்திரம் படைத்த படைப்பாளர்களின் ஆசியினால்தான் என்னால் இப்புத்தகம் எழுத முடிந்தது. இலக்கியங்களில், இசையில், மொழியில், சிற்பத்தில், தமிழர்ப் பண்பாட்டில் ஒன்றியிருக்கும் இயற்கையின் கணக்கினைக் காதலித்தலில், கண்ணீர் மல்கிப் போனதில் இப்புத்தகத்தின் பக்கங்களை ஈரமாக்கியிருக்கிறேன்.

இன்று பெருகிவரும் தகவல் தொடர்புகள், உண்மை வெளி வரவேண்டும் என்ற இளைஞர் துடிப்பு 15000 ஆண்டுகளாய் பீடு நடைபோடும் தமிழர் பண்பாடு, கலாச்சாரம் இவற்றினை எழுதுவதற்கு உரமாக்கியிருக்கிறேன். ஒளித்து வைக்கப்பட்ட உளியும் உளியின் வரலாறும் இன்று உங்கள் வீட்டுக்கதவை தட்டி எழுப்ப வந்திருக்கிறது.

படைப்பாளர் நிலையைச் சொல்லவந்திருக்கும் இந்நூலினை உங்கள் இதயத்தாமரைகளில் வைக்க வந்திருக்கிறேன். எத்துறையினர் ஆயினும் யாவரும் படைப்பாளர்களே என்ற நிலை பிறழாது சொல்லியிருக்கிறேன். எனவே, இந்நூல் காலத்தை வென்று கவிழாமல் நிற்கும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

நமது, பெருமைகளுக்குக் காரணமான படைப்பாளியின் ஐந்திர நூலினை சொல்லியிருக்கிறேன். ஐந்திறத்தில்தான் இயற்கையின் இயல்பில் காணும் மையக்கருத்துகள் காணப்படுகின்றன. அகத்தின் மையப்புள்ளியையும் புறத்தில் வடிக்கும் பொருட்களுக்கான மையப்புள்ளியையும் தொடர்புப்படுத்தி சொன்ன அறிவியல் செய்திகள் கிடைக்கின்றன. காலவிசையில் துடிக்கும் ஒளிநூல் காலம் இடம் கணக்காய் திரிபுருதல் குறித்தான செய்திகள் கிடைக்கின்றன.

சிற்பி செதுக்கியது சிலைகளை மட்டுமல்ல எனவும், அவன் செதுக்கியது பண்பாட்டினை எனவும் இந்நூலில் சொல்லியுள்ளேன். சிந்துசமவெளியும், மாமல்லபுரமும், அமராவதிச் சிற்பங்களும் 15000 ஆண்டு வரலாற்றின் உச்சம் என்று சொல்லியிருக்கிறேன்.

பேச்சுக்கு மொழி, வீச்சுக்கு வாள், உணவிற்குக் கலப்பை, நூலுக்கு எந்திரம், வாழ்விற்கு இல்லம், வணக்கத்திற்குக் கடவுள், கடலுக்கு மரக்கலன், பறப்பதற்கு விண்கலம், வணிகத்திற்கு நாணயம், அணிவதற்கு ஆபரணம், கடவுளர்க்கு ஆலயம், மன்னருக்கு அரியணை, அரண்மனை, கோட்டை, கோட்டைக் கதவுகள்..... இன்னும் என்ன சொல்லவேண்டும் படைப்பாளன் பெருமை சொல்ல.......

மன்னவனை தேரில் - போரில் மையப்புள்ளியில் நிற்கவைத்து, போராளிகள் கைகளில் ஈட்டிகளைக் கொடுத்து, தரையில் கோடுகள் வரைந்து, நிற்க வைத்ததும், புள்ளிகள் வைத்து அதில் யானைகளை நிற்க வைத்ததும், குதிரைகளை நிற்க வைத்ததும், சக்ர வியூகங்களையும் பத்ம வியூகங்களையும் வரைந்து வைத்தவன் படைப்பாளியே. அவனது எண்ணங்களில் உதித்த கட்டங்களே கட்டடங்களாகவும் ஜியோமிதி வடிவங்களே புறவெளியில் பொருட்களாகவும் செய்து காட்டப்பட்டுள்ளன என்பதையும் இந்நூலில் சொல்லியுள்ளேன்.

நாம் கண்ணால் காணமுடியாதப் படைப்புப் பேரதிசயத்தினை படைப்பாளிகள் தனது அகக் கண்களால் கண்டதையும் வடிவமாக்கியதையும் பாமரரும் படித்துத் தெரிந்து கொள்ள இந்நூல் சிறந்த கையேடாக விளங்கும். எல்லோரும் படித்து அறிந்து கொள்ள எளிய நடையில் விவரிக்கப்பட்டிருக்கிறது. படைப்பாளருக்கும் படைப்புகளுக்கும் பெருமை சேர்க்க வேண்டும் எனும் நோக்கில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. மண்ணிலும் கடலிலும் புதைந்திருக்கும் பல வரலாற்று உண்மைகள் வெளிவரவும் பாரதத்தின் பெருமையை மேன்மேலும் உயர்த்தவும் இளைஞர்கள் பல ஆய்வுகளை மேற்கொள்ளவும் இந்நூல் உற்ற துணைபுரியும்.

மரபுக்கலைகளுக்கான உலகளாவிய மையம் அமைத்து அதில் படைப்பு - மற்றும் படைப்பாளன் குறித்த ஆய்வுகள் மேற்கொண்டு பாரதத்தின் பெருமைகளை மேன்மேலும் தெரியச் செய்ய இது ஓர் தேசியப்பணியாக மலர ஆவண செய்யவேண்டும் என மேதகு ஆளுனர் அவர்களிடம் வேண்டுகிறேன்.

I request, His excellency Governor to make efforts to establish an International research and Analysis center for Traditional Artists and Tradition to bring back the glories of 15000 years of our soil.

இன்று பெருகிவரும் நவீன விஞ்ஞானம் ஆன்ம அறிவியலை நோக்கினால் அதில் பற்பல சாதனை நிகழும் என்றும் புதிய சரித்திரம் பேசத்துவங்கும் எனவும் சொல்லியிருக்கிறேன். அந்நிய கலைகளும், கலாச்சாரமும் ஊடுருவிவிட்ட இந்நேரத்தில் நாம் நமது கலைகளையும் கலாச்சாரத்தையும் இம்மண்ணின் மரபுப் படைப்பாளர்களையும் போற்றிப் பாதுகாக்க வேண்டியது நமது கடமை என்று கூறி இந்நூலுக்கு அணிந்துரை நல்லி பெருமைச் சேர்த்திட்ட ஆதீன சுவாமிகள் இருவருக்கும், திரு.கேசவசுப்பையா அவர்களுக்கும், வெளியீட்டோர், திரு.SP.அண்ணாமலை அச்சகத்தார் மற்றும் இங்கு வந்து சிறப்பு செய்திருக்கும் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.